செய்தி வெளியீட்டு எண்: 398 நாள்: 11.08.2017

# பத்திரிக்கைச் செய்தி

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர், திரு.பா.பொன்னையா, இ.ஆ.ப., அவர்கள் இன்று ( 11 .08.2017) வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்திருப்பதாவது:-

மாவட்டக் கருவூலம், காஞ்சிபுரம் மற்றும் சார்நிலைக் கருவூலங்களில் ஓய்வூதியம் பெறும் அனைத்து ஓய்வூதியதாரர்களும் நேர்காணல் செய்ய ஏதுவாக ஏப்ரல் 2017 முதல் ஜுலை 2017 முடிய வாய்ப்பு வழங்கப்பட்டது. ஆனால் இதுவரை நேர்காணலுக்கு வராதவர்கள் அல்லது வாழ்நாள் சான்றிதழ் அளிக்காதவர்கள் இம்மாதம் 24.08.2017-க்குள் நேர்காணல் செய்ய ஓர் வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இவ்வாய்ப்பினை தவறும் பட்சத்தில் ஆகஸ்ட் மாதம் 2017 முதல் ஓய்வூதியம் நிறுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நேர்காணலுக்கு வர முடியாதவர்கள் உரிய அரசு மருத்துவர்/அரசிதழ் சான்றிதழ் பெற்ற அலுவலர் மூலம் உரிய வாழ்நாள் சான்றிதழ் அளிக்கவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஓப்பம்/.....................
மாவட்ட ஆட்சித் தலைவர்,
காஞ்சிபுரம்.